# சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි

07.09.2020 திங்கட்கிழமை


## புதினம் தெரியுமோ

பளை வைத்தியசாலையில் இன்று நடைபெற்ற சம்பவம் இது. காலையில் நோயாளர் கூட்டம் நிரம்பி வழிந்தது. எல்லா நோயாளர்களுக்கும் டோக்கன் கொடுக்கப்பட்டு , மருத்துவரின் வரவுக்காகக் காத்திருந்தன்ர். சிகிச்சை பெற வந்தவர்களில் சிலர் நோய்த்தாக்கத்தால் துடித்துக் கொண்டிருந்தனர். சுற்றயல் பகுதி மக்களுக்கான ஒரே மருத்துவமனை என்பதால் பல்வேறு நோய்க்குறிகளோடும், மருத்துவர் எப்போது வருவார், சிகிச்சை பெற்று எப்போது வீடு திரும்பலாம் என்ற ஏக்கம் ஒவ் வொரு நோயாளிக்கும். ஆனால் நீண்டநேரமாகியும் 2

# தூதுக்குழுக்களை மாற்றியது அரசு

**அடுத்த 30 நாள்களில் இன்னும் சில அதிரடிகள்**

கொழும்பு, செப். 7

வெளிநாடுகளுக்கான இலங்கையின் தூதுக்குழுவில் பெரியதொரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அமெரிக்கா, சீனா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட முக்கிய நாடுகளுக்கான தூதுவர்கள் பலர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். 2

## கைதிகளை தனிமைப்படுத்த போகம்பறை சிறைக்கட்டடம்

கொழும்பு, செப். 7
விளக்கமறியல் கைதிகளின் தனிமைப்படுத்தலுக்காக கண்டியில் அமைந்துள்ள பழைய போகம் 2

## இலங்கையின் இறைமையை அமெ. உதவிகள் பாதிக்கா!

*இலங்கைக்கான தூதுவர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 7
அமெரிக்காவின் உதவித் திட்டங்கள் எதுவும் இலங்கையின் இறைமையைப் பாதிக்காது என்று அமெரிக்க தூதுவர் அலைனா தெரி 2

## தனிமைப்படுத்தலில் இருந்தவர் இறந்தார்

*நுவரெலியாவில் பரபரப்பு*

கொழும்பு, செப். 7
நுவரெலியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த 56 வயதுடைய சுப்பிரமணியம் அந்தகுமார் என்பவர் நேற்று மாலை உயிரிழந்துள்ளார். இதையடுத்து நேற்றும் இன்றும் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: 2

## வீட்டின் சுவர் வீழ்ந்து ஒருவர் பரிதாபச் சாவு

கொழும்பு, செப். 7
நவகமுவ, கொத்தலாவல பகுதியில் வீட்டின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். கொத்தலாவல பாசல் மாவத்தை பகுதியில் 2



## பாடசாலை மாணவருக்கு முகக்கவசம் கட்டாயம்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பரிந்துரை*

கொழும்பு, செப். 7
பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் நாளை முதல் வழக்கம் போல் மீண்டும் ஆரம்பாகும் என்பதால், மாணவர்கள் முகக் கவசம் அணிவது உட்பட அவர்களுக்கு வழங்கப்படும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதை 2

## நாடாளுமன்றுக்கு வருகின்றார் தூக்குத் தண்டனை குற்றவாளி!

*பிரேமலாலுக்கு மன்று அனுமதி*

கொழும்பு, செப். 7
மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மரண தண்டனை 2



## செம்மணியில் கொல்லப்பட்ட கிருசாந்தியின் நினைவுதினம் இன்று!!!

யாழ்ப்பாணம், செப். 7
யாழ். செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 24ஆவது ஆண்டு நினைவுதினம் செம்மணி பகுதியில் இன்றைய தினம் கடைப் 2

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகரசபை ஊழியர்கள் போர்!

கொழும்பு, செப். 7
சம்பள ஏற்றம் வழங்கப்பட வேண்டும், சம்பள மீளாய்வு செய்யப்பட வேண்டும், உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகரசபையின் ஒருதொகுதி சுகாதார ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள அட்டவணைப்படுத்தப் 2



# தூதுக்குழுக்களை....

இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளராகப் பதவி வகித்த ரவிநாத் ஆரிய சிங்க அமெரிக்காவின் வொஷிங்டனுக்கான புதிய தூதுவராக நியமிக்கப்படவுள்ளதுடன், இந்தியாவின் புதுடில்லிக்கான தூதுவராக மிலிந்த மொரகொடவும், சீனாவுக்கான தூதுவராக கலாநிதி பாலித ஹோகணவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட முன்னாள் தூதுவர்கள் நாடுதிரும்ப வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி யாகவுள்ள ஷேனுகா செனவிரத்ன, ஒட்டாவிற்கான தூதுவராகவுள்ள அசோக கிரிகாகம, சுவீடனின் ஸ்டோக்ஹோம் தூதுவராகவுள்ள சுதந்தக கனேகமாராச்சி, எகிப்தின் தூதுவராகவுள்ள தமயந்தி ராஜபக்ஷ, ஹவானா தூதுவராகவுள்ள ஏ.எல். ரத்னபால மற்றும் ஹேய்கிற்கான தூதுவராகவுள்ள சுமித் நாகந்த ஆகியோருக்கே இந்தக் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் அடுத்துவரும் 30 நாட்களில் அதிரடியான பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# இலங்கையின்...

வித்தார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமெரிக்காவின் இலங்கைக்கான திட்டங்கள் தொடர்பில் அண்மைக்காலமாக பிழையான கருத்துக்கள் காணப்படுகின்றன. அவை துரதிஷ்டமானவை. பரஸ்பரம் இறைமையை மதித்துப் பாதுகாப்பதுதான் வலுவான ஒத்துழைப்பு. எங்களின் எந்தத் திட்டங்களும் இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துபவையல்ல.
இலங்கைக்கான திட்டங்களை உருவாக்குவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் நாம் மிகுந்த வெளிப்படைத்தன்மையுடன் இருக்கின்றோம். நீண்டகால ஜனநாயக வரலாற்றில் தங்கியிருப்பதன் மூலமும் இலங்கையின் ஜனநாயக கட்டமைப்புகளை வலுப்படுத்துவதன் மூலமும் இலங்கையுடனான அமெரிக்க உறவு பலப்படும் என்று நம்புகின்றோம் என்றார். (ம-இ)

## புதினம் தெரியுமோ

மருத்துவர் அவர்களைப் பார்வையிடவில்லை. சில நிமிடங்களில், மருத்துவமனையின் மேல்தளத்தில் கொண்டாட்டக் கூச்சல்கள்.ஹப்பி பேர்த்டே ரூ யூ என்று பிறந்ததின வாழ்த்துப்பாடல்கள் நடுவே மருத்துவர் கேக் வெட்டி மகிழ்ந்து கொண்டிருந்தார்.
மருத்துவர் பிறந்ததினம் கொண்டாடுவது தவறில்லை, அவரும் சராசரி மனிதர் தானே. ஆனால் தனக்காக இத்தனை பேர் பிணியோடு காத்திருக்க, தனக்காக கேக் வெட்டி மகிழ்வது மனித மாண்புக்கு சரியானதா?
இந்தக் கோபத்தோடு , கீழிருந்த பணியாளர்களிடம் ஒருவர் ஆவேசமாக கேள்வி கேட்டார். அது உடனேயே மருத்துவரின் காதுக்கும் போனது.
அந்தாளை ஹொஸ்பிட்டலை விட்டு வெளியிலை அனுப்பு, இல்லாட்டி பொலிஸிட்ட சொல்லி வெளியில போடு, அது மட்டும் நான் ஆருக்கும் ட்ரீட்மெண்ட் செய்யமாட்டன் என்று கத்தியிருக்கிறார் மருத்துவர். தன்னால் மற்ற நோயாளர்கள் பாதிக்கப்படக்கூடாது என்று கேக் வெட்டியதைக் கேள்வி கேட்ட நபர் அங்கி ருந்து வெளியேறிய பின்னரே மருத்துவர் மற்றவர்களுக்கு சிகிச்சை அளித்தாராம்.
இதையெல்லாம் எங்க சொல்லி அழ?

பட்சி

# கைதிகளை...

பறை சிறைச்சாலை கட்டடத்தை பயன்படுத்த சிறைச்சாலைத் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.
அதன்படி, கொழும்பு மற்றும் மத்திய மாகாணத்தில் உள்ள சிறைகளுக்கு அனுப்பப்படும் கைதிகள் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு இந்த மையத்தில் தடுத்து வைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சுமார் 500 கைதிகள் தனிமைப்படுத்தலில் உள்ளனர். அந்த எண்ணிக்கையை ஆயிரமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-இ)

# நாடாளுமன்றுக்கு வருகின்றார்....

விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவை, நாடாளுமன்றம் செல்ல அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று அறிவிப்பதாக தெரிவித்திருந்த நிலையிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கஹவத்தை பகுதியில் 2015ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைப் பேரணி இடம்பெற்றபோது, ஒருவரை சுட்டுக் கொலை செய்தமையில் பிரேமலால் முக்கிய குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார். அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்தே அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. (ம-இ)

# வீட்டின் சுவர் வீழ்ந்து...

உள்ள வீடொன்றில் சுவரே இடிந்து வீழ்ந்துள்ளது. உயிரிழந்தவரைத் தவிர மேலும் இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (மஇ)

# தனிமைப்படுத்தலில்...

டுபாய் நாட்டில் தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றிய இவர் அண்மையில் இலங்கைக்கு வந்தார். அவர் நுவரெலியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தனிமைக்காலம் முடிவடைய முன்னர் நேற்று மாலை அவர் உயிரிழந்தார். இதனால் கொரோனா பெருந்தொற்றால்தான் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.
எனினும் கொரோனாவால் அவர் உயிரிழக்கவில்லை என்றும் நீரிழிவு மற்றும் பிறிதொருவகை வைரஸ் தொற்றால்தான் அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# பாடசாலை....

கட்டாயமாக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசிடம் கோரியுள்ளது.
கோவிட் 19 தொற்றுநோய் இன்னும் பல நாடுகளில் பரவலாக இருப்பதால், இந்த நோய் நம் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது என்று கருத முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதி ஹரிதா அலுத்ஜ் தெரிவித்தார். (ம-இ)

# பல்வேறு...

படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக அனுமதி வழங்கப்பட்டது. குறைந்த கல்வித் தகைமையோடு நிரந்தர நியமனங்களை வழங்கும்படியும், 180 நாட்கள் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான அனுமதியும் அரசால் வழங்கப்பட்டது. இதனை செய்து கொடுக்காமல் திறைசேரியின் செயலாளரின் கடிதத்தை காரணம் காட்டி எந்தவிதமான நியமனங்களையும் வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமக்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். உண்மையில் ஆளணிக்கான அனுமதி இல்லையென்றால் மட்டுமே திறைசேரியில் ஆளணிக்கான அனுமதி பெறவேண்டும்.
எனினும் நகரசபையில் ஆளணிக்கான வெற்றிடம் தேவைக்கு அதிகமாக உள்ளது அதன் அடிப்படையில் நேர்முகத்தேர்வுகளில் சித்திபெற்றுள்ள 11 ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கமுடியும்.
மேலும் சம்பள மீளாய்வு என்ற பேரில் ஊழியர்கள் பெற்றுவந்த சம்பளங்களை குறைத்து வழங்கிய நிலையில் இதனை வடமாகாண சபையிடம் தெரிவித்த வேளையில் வடக்கு மாகாண சபையின் 32ஆவது சபை அமர்வில் ஊழியர்களின் பதவி மாற்றத்தின்போது அவர்கள் பெற்றுவந்த சம்பளத்தை குறைத்து நிர்ணயித்தமை தவறானது என மாகாணசபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
அரச நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமைவாக சம்பள மீளாய்வுகள் குறியீட்டின் அடிப்படையில் செய்து வழங்கப்பட வேண்டும் என தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு கடிதம் அனுப்பியது. இதனை அடிப்படையாக வைத்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் பதவிக்குரிய சம்பளக்குறியீட்டு அட்டவணையை கையொப்பத்துடன் வடக்கு மாகாணத்தில் வெளியிட்டது. அதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்களுக்கு சம்பள மீளாய்வுகள் செய்து வழங்கப்பட்டன. வவுனியா நகரசபை ஊழியர்களுக்கு மாத்திரம் மேற்குறிப்பிட்டதற்கு அமைவாக சம்பள மீளாய்வு செய்யப்படாமல் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிரூபம் 2015 என போலியான சுற்றுநிருபத்தை தயாரித்து சம்பள மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
இவைகளை தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்த வேளையில் அதனைப் பார்வையிட்ட பணிப்பாளர் வழங்கிய சம்பளங்கள் யாவும் பிழையானது என குறிப்பிட்டுள்ளார். இதனால் ஊழியர்கள் மாதம் ஒன்றிற்கு தமது அடிப்படைச் சம்பளத்திலிருந்து சிலதொகையை இழந்துவருகின்றார்கள். அத்துடன் வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான அனுமதி அரசினால் வழங்கப்பட்டும் பல வருடங்கள் இடைநிறுத்தப்பட்ட சம்பள ஏற்றங்கள் இன்றுவரை தேக்கநிலையென தெரிவித்து வழங்கப்படாமல் இருக்கிறது.
அத்துடன் ஊழியர்களின் சம்பள மீளாய்வானது 2013ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை செய்யப்படவில்லை கேட்கும்போதெல்லாம் ஆய்வுசெய்யப்பட்டு வருவதாக தெரியப்படுத்துகின்றார்கள். இரண்டு நாட்களில் செய்யப்படுகின்ற அந்தவிடயத்திற்காக 11குழுக்கள் நியமிக்கப்பட்டும் பலன் ஒன்றுமில்லை. மாகாணசபையின் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை நகரசபையின் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை - என்றனர். ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், திலிபன், ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.
இது தொடர்பாக எதிர்வரும் 12ஆம் திகதி உரிய அதிகாரிகளுடனும், ஊழியர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டு தீர்வைத்தர முயற்சிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவித்தார். (ம-110)

# கிருசாந்தியின்...

பிடிக்கப்பட்டது. நிகழ்வில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட ஏனைய உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.
1996ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) வீதியால் சென்று கொண்டிருந்தவேளை செம்மணிப் பகுதியில் அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத்தினர் கிருஷாந்தியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கழுத்தை நெரித்துப் படுகொலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
செம்மணி இராணுவ முகாமில் கிரு ஷாந்தியை தடுத்து வைத்திருந்ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறியதை அடுத்து மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59), மாணவியின் சகோதரனும், யாழ். பரியோவான் கல்லூரி மாணவனுமான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35) ஆகியோர் மாணவியைத் தேடிச்சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்த வேளை அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர் என்றும் கூறப்படுகின்றது. அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்களும் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைக்கப்பட்டது.
இவர்களின் நினைவுதினமே இன்று கடைப்பிடிக்கப்பட்டது. (ம-20,106)

# தருமபுரம் நெசவு நிலையத்தில் தொழிலாளர் தொகை வீழ்ச்சி

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, செப் 7



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட தருமபுரம் கிராமத்தில் இயங்கிவரும் நுண்கலை நெசவு நிலையத்தில் தொழில் புரிவோர் எண்ணிக்கை அண்மைக் கால மாக குறைவடைந்துள்ளது. அவர்களுக்கு போதியளவு வருமானம் கிடைக்காமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்ப டுகின்றது.

நாற்பது வருடங்களாக சிறப்பாக இயங்கி வரும் குறித்த நுண்கலை நெசவு நிலையத்தில் தற்போது வெறும் 5 பேர் தொழில்புரிகின்றனர். அத்துடன் 10க்கு மேற்பட்டவர்கள் பயிற்சி பெற்று வருகின் றனர். இங்கு அதிகளவான உற்பத்திகள் செய்யக்கூடிய வசதிகள் காணப்படுகின் றன. உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நெசவு உற்பத்தி நிலையத்தில் இருந்து மாவட்டத்திற் கான நெசவு உற்பத்திகளை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (ந-6)



எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் நிர்மா ணிக்கப்பட்ட கிளி.தருமபுரம் மத்திய கல்லூரியின் நுழைவாயில் திறப்புவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் எஸ்.வி.முருகேசு நிறுவனத்தின் பிரதிநிதிகள், வலயகல்வி பணிமனையின் கண்டாவளை பிரதிநிதி உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (ந-113)

## மழைக்கு சாத்தியம்


கொழும்பு, செப்.7

இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் பல இடங்க ளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

பேருவளையிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0 2.5 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக் கூடிய சாத்தியம் காணப்படு கின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள் ளது. (ற-இ)



## காளியம்மன் ஆலயத்தில் ஆபத்தான குளவிக்கூடுகள்

வவுனியா, செப்.7

வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் ஆலயத் தின் நுழைவாயிலில் ஆபத்தான தேனி வகையை சேர்ந்த பெரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. இதனால் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் பல வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும், இவர்க ளால் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதே வேளை, வவுனியா நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பெரிய குளவிக்கூடுகள் காணப்படு கின்ற நிலையில், இவற்றால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சுட் டிக்காட்டப்படுகின்றது.

எனவே ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் இவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக் கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (ந-18)



## தனிமையில் நின்ற பிக்கப் பொலிஸ் நிலையத்தில்

வவுனியா, செப்.7

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை தனிமையில் நின்ற பிக்கப் ரக வாகனம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது.

பாலமோட்டை ஈச்சங்குளம் பிரதான வீதியின் காட்டுப் பகுதியில் பல மணி நேரமாக பிக்கப் ரக வாகனம் தனிமையில் நிற்பதாக பொதுமகனொருவர் ஓமந்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந்துக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

குறித்த தகவலின் அடிப்படையில் மேற்படி இடத்திற்கு குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர், அப் பகுதியில் சோதனை மேற்கொண்டதுடன் பிக்கப் வாகனத்தை ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

மரம் கடத்தலுக்கு இவ் வாகனத்தைப் பயன்படுத்தியிருக் கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள ஓமந்தைப் பொலிஸார் வாகனத்தின் உரிமையாளரை அறிவதற்கு ரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர். (ந-18)

## பெருந்தோட்டத் துறை ஊழியர்கள் தொடர் மழையால் பாதிப்பு!

கொழும்பு, செப்.7

கடந்த சில மாதங்களாக மலையக பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக பெருந்தோட்டத் துறை ஊழியர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களது வேலை வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன என பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தெரிவிக்கின்ற னர். கடந்த மாதம் ஓரளவு வேலை கிடைத்த போதும் எங்களின் குடும்பங்களைக் கொண்டு நடாத்தும் அளவிற்கு வேதனம் இல்லை.

இந்த மாதம், வாரத்தில் 3 அல்லது 4 நாள்கள் மட்டுமே வேலை வழங்கு வதால் எதிர்வரும் மாதங்களில் மிக குறைந்தளவு வேதனமே கிடைக் கும். எனவே குடும்பத்தைக் கொண்டு நடாத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். வேலை இல்லாத காரணத்தால் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு, பருவகால சீட்டு மற்றும் ஏனைய உபகர ணங்களைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. பெருந்தோட்டத் தொழிலை நம்பி வாழ்வது மிகவும் அபாயகரமான நிலையிலுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-இ)



இணுவிலைச் சேர்ந்த புலவர்மணி வை.க.சிற்றம்பலத்தின் நல்லூர் கலம்பகம் நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் கந்தர்மடம் பலாலி வீதியில் அமைந்துள்ள இந்துசமய பேரவையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலாபூஷணம் எஸ்.சிவ ஞானராசா வரவேற்புரையையும், புலவர் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் வாழ்த் துரையையும், இந்து சமய பேரவை செயலாளர் ஈ.சிறீ.சிவசக்திகிரீவன் தலைமை யுரையையும், வலிகாமம் வலய (தமிழ்) ஆசிரிய ஆலோசகர் கவிஞர் ம.பா. மகாலிங்கசிவம் நூல் அறிமுக உரை மற்றும் ஆய்வுரையையும், பதிப்பாசிரியர் பதிலுரை மற்றும் நன்றியுரையையும் நிகழ்த்தினர். (ந-159)

# புதிய பரிணாமத்தில் சமுர்த்தி சேவைகள்

## பயனாளிகள் விவரங்கள் கணினி மயப்படுத்தல் ஆரம்பம்

கொழும்பு, செப்.7

එදිරිවරුම් 2021 ஆம் ஆண்டில் அனைத்து சமுர்த்தி சேவைகளும் கணிணி மயப்படுத்தலில் உள்வாங்கப்பட்டு புதிய பரிணாமத்தில் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் (சமுர்த்தி மகாசங்கங்கள்) ஆகியவற்றை துரித கதியில் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாவது,

தற்போது சமுர்த்தி திட்டத்தில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் ஆகியவற்றின் சேவைகள் மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் ஏனைய நிதி நிறுவனங்களை விட குறுநிதிய வங்கிச்சேவையில் அதிகளவான பயனாளிகள் பயனடைந்துள்ளனர். அத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரமும் உயர்ச்சி அடைந்துள்ளது.

සමෘද්ධි සංවර්ධන
දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

தற்கால நிலையில் சமுர்த்தி சேவைகளை விரிவாக்குவதற்காக சமுர்த்தி வங்கிகள் மற்றும் சங்கங்களை துரித கதியில் கணனி மயப்படுத்துவதற்கு சமுர்த்தி திணைக்களம் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு தகவல் தொழில் நுட்பம் தொடர்பிலான தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு இணைய வங்கிச் சேவைக்குள் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி சங்கங்கள் செல்வதற்கான இரகசிய இலக்கங்களை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நாட்டிலுள்ள 1,073 சமுர்த்தி வங்கிப் பிரிவுகள் மற்றும் 223 சமுர்த்தி மகா சங்கங்கள் ஆகியவற்றில் சுமார் 500க்கு மேற்பட்ட வங்கிகள் இது தொடர்பில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இதனடிப்படையில் சமுர் திப் பயனாளிகளின் விபரங்கள் கணினி மயப்படுத்தும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2021 ஆம் ஆண்டில் சமுர்த்தி வங்கிகள், சமுர்த்தி சங்கங்கள் அனைத்தும் கணணி மயப்படுத்தப்பட்டு பயனாளிகளின் வாடிக்கையாளர் சேவைகள் இலகுபடுத்தப்பட்டு புதிய பரிணாம வளர்ச்சியில் பொது மக்களுக்கான சேவையினை வழங்கும் - என்றார். (ந-39)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் தடைப்பட்டது மின்சாரம்





கடும் காற்றுடன் கூடிய அடைமழையால் ஹற்றன், டிக்கோயா மெனிக்வத்த 2 ஆம் பிரிவில் நேற்றையதினம் பெரிய மரமொன்று மின் இணைப்புகள் மீது முறிந்து வீழ்ந்ததால் அப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கினிகத்தேன மின்சார சபைக்கு அறிவித்துள்ள நிலையில், இழுத்தடிப்புகளுக்கு மத்தியில் தற்போது கொங்றீட் மின் கம்பங்கள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அவற்றை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் 105 குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (ந)



# சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு

கனடா, மொன்றியலைச் சேர்ந்த செல்வன் அசாந் கிரிசாந்தின் நினைவு நாளையொட்டி கிடைக்கப்பெற்ற நிதியின் மூலம், கல்வி பொருளாதார அமைப்பினரால் மாங்குளம் உயிரிழை அமைப்பின், முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட 13 பயனாளிகளுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன.

உயிரிழை அமைப்பின் செயலாளர் எஸ். இருதயராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், அமரர் அசாந் கிரிசாந்தின் குடும்பத்தின் சார்பில் எஸ்.ஏ.ஆறுமுகன், உயிரிழை அமைப்பின் தலைவர் கே. சிறீகரன், கல்வி பொருளாதார அமைப்பின் சார்பில் செயலாளர் ஐ.யசோதரன், பொருளாளர் இ. தயாபரன், சமூக செயற்பாட்டாளர் பா.பாலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ந-222)

# சட்டவிரோதமாக நாட்டுக்குள் நுழைய முயன்ற மூவர் கைது

கொழும்பு, செப்.7

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைய முயன்ற மூவரை இந்திய கரையோர பாதுகாப்பு படையினர் கைதுசெய்துள்ளனர். சந்தேக நபர்கள் பிளாஸ்டிக் குழாய்கள் ஊடாக மிதக்கும் கருவியொன்றை உருவாக்கி மன்னார் வளைகுடா வழியாக நுழைய முற்படுகின்றனர் என இந்திய மீனவர்கள் குழுவொன்று தகவல் வழங்கியதைத் தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் இலங்கையர் ஒருவரும் உள்ளடங்குகின்றார். அம்பாறை பகுதியைச் சேர்ந்த அவர் யுத்த காலத்தில் இந்தியாவுக்கு தப்பிச் சென்று பின்னர் அங்கு விசா அனுமதிப்பத்திரம் காலாவதியானதைத் தொடர்ந்து தமிழக அகதிகள் முகாம்களில் வசித்து வந்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் இராமநாதபுரம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-இ)

# மறைந்த தேரர் ஒருவரின் பொருள்களில் முறைகேடு

கொழும்பு, செப்.7

மறைந்த தேரர் ஒருவர் பயன்படுத்திய பொருள்களில் முறைகேடு இடம்பெறுகிறது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மறைந்த மாதுலுவே சோபித தேரர் பயன்படுத்திய கார் மற்றும் விகாரையின் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான மினிபஸ் ஒன்றும் நபரொருவரினால் வாடகை நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டு வருமானம் ஈட்டப்படுகிறது என்' பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதியப்பட்டுள்ளது. கோட்டை ஸ்ரீ நாகவிகாரையின் கொடஹேனே நாரத தேரரினால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-இ)

# ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, செப்.7

களுத்துறையிலிருந்து நீர்கொழும்பு நோக்கி இன்று காலைப் புறப்பட்டுச் சென்ற ரயில் ஒன்று கோட்டைக்கும் மருதானைக்கும் இடையில் தடம்புரண்டுள்ளது. இதனால் அப்பகுதிகளுக்கு இடையிலான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த ரயில் பாதையை சீர்செய்யும் பணிகளில் ரயில் நிலைய ஊழியர்களும், அதிகாரிகளும் ஈடுபட்டு வருகின்றனர் என ரயில்க் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (வ-இ)

# மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப்.7

நாட்டில் தொடரும் சீரற்ற கால நிலை காரணமாக ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-இ)

ஈஸ்டர் தாக்குதல் சாட்சிமளிப்பு

# ஆணைக்குழுவில் பிள்ளையான்



கொழும்பு, செப்.7

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப் பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்னிலையாகியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என அழைக்கப் படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப் பிரிவில் கடந்த 3ஆம் திகதி ஏற்கனவே முன்னிலையாகியிருந்தார். இதன்போது அவரிடம் சுமார் 5 மணித்தியாலங்கள் வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தது. இந் நிலையில் ஆணைக்குழுவின் அழைப்புக்கு இணங்க இன்று அவர் மீண்டும் அங்கு முன்னிலையாகியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம் படுகொலை வழக்கில் கடந்த 2015 ஒக்ரோபர் 11ஆம் திகதி கைது செய்யப்பட்டு தடுப்பு காவலிலுள்ள அவருக்கு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சாட்சியமளிக்க அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அவர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டார். (வ-இ)

## சிறைச்சாலைக்குள் ஹெரொய்ன் வீச முற்பட்டவர் கைது

கொழும்பு, செப்.7

மகசின் சிறைச்சாலைக்குள் ஹெரொய்ன் வீச முற்பட்ட ஒருவர் நேற்றுக் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலைய டுத்தே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சீவலிபுர பொரல்லைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான இந்த சந்தேகநபர் வெல்லம் பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாலமுல்ல பகுதியில் வைத்து கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 2 கிராம் 725 மில்லி கிராம் ஹெரோய்ன், 36,000 ரூபா பணம், கைத்தொலைபேசிகளுக்கான 10 மின்கலங் கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரி வித்துள்ளது. (ற-இ)

## பதில் பொலிஸ்மா அதிபரும் ஆணைக்குழுவில் முன்னிலை

கொழும்பு, செப்.7

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆரா யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரத்னவும் பிரன்னமாகியுள்ளார். வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்வதற்காகவே அவர் பிரசன்னமாகி யுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-இ)

## சிறை கழிவறைக்குள் கைதி உயிர்மாய்ப்பு

பொலநறுவை, செப்.7

சிறைக் கழிவறைக்குள் தூக்கிட்டு உயிர் மாய்த்த சம்பவம் பொலநறுவை சிறைச்சாலை யில் இடம்பெற்றுள்ளது. போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 28 வயதுடைய சந்தேகநபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)




## மேலும் இருவருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, செப்.7

இலங்கையில் மேலும் இருவ ருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்கள் இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பியவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்க ளின் எண்ணிக்கை 3,123 ஆக அதிகரித்துள்ளது. இதே வேளை, கொரோனா தொற் றுக்கு உள்ளானவர்களில் 2,925 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. (வ-இ)

## நியூ டயமண்ட் கப்பல் தீ; செலவை மதிப்பிட குழு

கொழும்பு, செப்.7

இலங்கையின் கிழக்கு கடலில் தீப்பற்றிய எம்டி நியூ டயமண்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைத்து அதைப் பாதுகாக்க இலங்கை எடுத்த நடவடிக்கை களின் செலவு மற்றும் சேத மதிப்பீட்டை மேற்கொள்ள ஒரு நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த நிபு ணர் குழு இன்று அல்லது நாளை காலை கப்பலின் இருப்பிடத்தைப் பார்வையிடும் என்று கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் பொது மேலாளர் கலாநிதி தர்னி பண்டாரதீப் குமார தெரிவித் தார். நாட்டின் கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதம் மற்றும் சம்பவத்தால் ஏற்பட்ட செலவுகள் மற்றும் இழப்புகள் தொடர்பில் முழு மதிப்பீட்டு அறிக்கை யைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் நேற்று அறிவு றுத்தினார். தீக் கட்டுப்பாடு நடவடிக்கையில் ஈடு பட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங் களின் பிரதிநிதி களுடனான கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார். (வ-இ)



## பௌத்த மகா சம்மேளனத்தால் வீடு கையளிக்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, செப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்ற கிராமமான புணாணை கிராமத்தில் வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தால் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் இரண்டாம் கட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட ஒரு வீடு பயனாளிக்கு கையளிக்கும் நிகழ்வும், மூன்றாம் கட்டமாக மூன்று பயனாளிகளுக்கு வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இன்று இடம்பெற்றது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் டாக்டர் சந்திக்க எபடிகடுவ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் தலைவர் ஜகத் சுமதிபால மற்றும் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், பௌத்த மதகுருமார், பிரதேச பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு நிர்மாணிக்கப்படும் ஒரு வீட்டின் பெறுமதி யானது ஐந்து இலட்சம் ரூபாய் என்று அமைப்பின் தலைவர் ஜகத் சுமதிபால தெரிவித்தார்.நிகழ்வில் வீடுகளை அமைப்பதற்கு உதவிய சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கு அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் மாவட்ட கிளையினரால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ந-150)

## 'பாதாளயோ' நாவல் நேற்று ஜனாதிபதியிடம் கையளிப்பு

கொழும்பு, செப்.7

பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவால் எழுதப்பட்ட "பாதாளயோ" என்ற நாவலும் "கோத்தாபய" என்ற நூலின் ஆங்கில பிரதியும் ஜனாதிபதியிடம் நேற்றுப் பிற்பகல் கையளிக்கப்பட்டது.

உண்மையான பல நிகழ்வுகளை அடிப்படை யாகக் கொண்டு "பாதாளயோ" என்ற நாவல் எழுதப்பட்டுள்ளது. "கோத்தாபய" என்ற சிங்கள நூல் கடந்த வருடம் வெளியிடப்பட்டி ருந்ததுடன், இந்தமுறை அதன் ஆங்கில பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த இரு நூல்களினதும் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கமால் குணரத்னவால் இரண்டு நூல்களினதும் முதற் பிரதிகள், ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினருக்கு வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நாவல்கள், கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.(ற-இ)



# குளவிகள் தாக்கியதில் 12 தோட்டத் தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

ஹற்றன், செப்.7

கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் தாக்கியதால் 12 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹற்றன், லெதண்டி தோட்டம் புரொடக் பிரிவில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 8 பேரும், மஸ்கெலியா சாமிமலை, ஒல்டன் கிங்கோரா தோட்டத்தில் தேயிலை மலையில் பணியில் இருந்த 4 தொழிலாளர்களும் இவ்வாறு குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது. ஹற்றன், லெதண்டி தோட்டத் தொழிலாளர்கள் 8 பேர் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 6 பெண்களும் 2 ஆண்களும்



உள்ளடங்குகின்றனர். இவர்களில் இருவர் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் எனவும் நால்வர் வீடு திரும்பியுள்ளனர் எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)



## முதுசித்தம் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.7

யாழ் .பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட வவுனியா வளாக கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி (அணி V) மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்று கூடலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா வளாக பிரதான மண்டபத்தில் தலைவர் க.ஆறுமுகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் தேர்ச்சி மிகு அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி நூலை வெளியிட விருந்தினர்கள் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக முன்னாள் தேர்ச்சி மிகு அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-159)



## 12 மணிநேரத்தில் 1,280 பேர் கைது

கொழும்பு, செப்.7

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட 12 மணிநேர விசேட சோதனை நடவடிக்கையின் போது 1,280 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 519 கைதிகள், குற்றச் செயல்களில் ஈடுபட்ட 73 நபர்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 637 பேர் உள்ளடங்குகின்றனர்.

இந்த விசேட சோதனை நடவடிக்கையானது நேற்று மாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை நடத்தப்பட்டது. (ற-இ)

## பொடி லெஷி, கொஸ்கொட தாரகவை மன்றில் முன்னிலைப்படுத்த பணிப்பு

கொழும்பு, செப்.7

பூஸா சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் கைதிகள் இருவரிடம் வாக்குமூலங்களைப் பெற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது. பொடி லெஷி என அழைக்கப்படும் ஜனித் மதுசங்கடி சில்வா, கொஸ்கொட தாரக என அழைக்கப்படும் கீர்த்தி தாரக பெரேரா விஜேசேகர ஆகியோரை முன்னிலைப்படுத்தவே குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சட்டமா அதிபரால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பூஸா சிறைச்சாலையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட 5 சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் அந்த சிறைச்சாலையின் அத்தியட்சகருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுத்தமை கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அவர்களிடம் வாக்குமூலம் பெறுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் பூஸா சிறைச்சாலை கைதிகள் சிலர் தமக்கான வசதிகளை அதிகரிக்க கோரி உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். அது தொடர்பில் ஆராய 5 அதிகாரிகளுக்கும், ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கும் இவர்கள் கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# திருமலையில் விபத்து பிரிவுக்கான கட்டட நிர்மாணங்களை துரிதப்படுத்தக் கோரிக்கை

திருகோணமலை, செப்.7

திருகோணமலைப் பொது வைத்தியசாலையில் சுமார் பல கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சேவை பிரிவுக்கான கட்டட நிர்மாணப் பணிகள் சுமார் ஒன்றரை வருடமாக கைவிடப்பட்ட நிலையில், இந்த நிர்மாணப்பணிகளைத் துரி தப்படுத்துமாறு வைத்தியசாலை நிர்வாகமும், புத்திஜீவிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள அனைத்து நோயாளர்களையும் மேலதிக சிகிச்சைகளுக்காக இந்த வைத்தியசாலைக்கு அழைத்து வருவதாகவும், அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும், இதனால் தற்போது இயங்கி வருகின்ற விபத்து சேவை பிரிவில் இடப்பற்றாக்குறை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் கட்டட நிர்மாண வேலைக்காகப் பொருத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிக்குமாய்கள் துருப்பிடித்து கீழே விழும் அபாய நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மிக விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-இ)

# ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவது சரியானதே

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வக்காளத்து

கொழும்பு, செப்.8

பலமான அரச நிர்வாகத்தை மீண்டும் ஸ்தாபிக்கவேஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் முழுமையாக 20ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமை கொண்டவர் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை பலவினப்படுத்தப்பட்டது. இறுதியில் நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும் முரண்பட்டுக் கொண்டமை மாத்திரமே கடந்த ஆட்சியின் பெறுபேறாக அமைந்தது.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிறைவேற்று அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட்டதன் காரணமாகவே 30வருட காலப் போர் குறுகிய காலத்தில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாடு பொருளாதார,நி ர் மாணத்துறையில் முன்னேற்றமடைந்தது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம் -என்றார். (ப-இ)

சினி துளி

# சிங்கிளாக இருப்பதே நன்று

ராஷ்மிகா



தமிழ், தெலுங்கில் தற்போது பிரபலமான நடிகையாக இருக்கிறார் ராஷ்மிகா.

தெலுங்கில் பல வெற்றிப் படங்களைக் கொடுத்து முன்னணி நடிகையாக உயர்ந்தார். குறிப்பாக விஜய் தேவரகொண்டா உடன் இவர் நடித்த படங்கள் வெற்றி பெற்றதுடன் அவருடன் நெருக்கம் காட்டியதால் இவர்களுக்குள் காதல் என செய்திகள் பரவின. ஆனால் இதை பல சமயங்களில் இருவரும் மறுத்தனர்.

சமூக வலைத்தளத்தில் ரசிகர்கள் உடன் பேசிய ராஷ்மிகாவிடம் பலரும் யாரைக் காதலிக்கிறீர்கள் என கேட்டனர். அதற்கு அவர், “எனக்கு தெரிந்தவர்கள் எல்லோருடனும் என் பெயரைச் சேர்த்து பேசுபவர்களுக்கான பதில் நான் சிங்கிள் தான். அப்படி இருக்கவே பிடித்திருக்கிறது. சிங்கிளாக இருக்கிறோம் என வருத்தப்படாதீர்கள். அப்படி இருப்பதை ரசிக்கத் தொடங்கி விட்டால் உங்கள் வாழ்க்கை உயரும்” எனத் தெரிவித்துள்ளார்.





# “தப்புன்னா தட்டி கேட்பேன், நல்லதுன்னா தட்டி குடுப்பேன்”

## ‘பிக் பாஸ் 4’யின் புதிய ப்ரோமோ!

விஜய் ரிவியில் ‘உலக நாயகன்’ கமல்ஹாசன் தொகுத்து வழங்கும் ‘பிக் பாஸ்’ ஷோவின் சீசன் 4க்கான ஷூட்டிங் வெகு விரைவில் ஆரம்பிக்க உள்ளது. கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி, விஜய் ரிவி தங்களது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் ‘பிக் பாஸ்’ சீசன் 4க்கான முதல் ப்ரோமோவை வெளியிட்டது. நடிகர் ‘உலக நாயகன்’ கமல்ஹாசன் இடம்பெற்றிருக்கும் இந்த முதல் ப்ரோமோ வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. இந்த சீசன் 4யில் கலந்து கொள்ளப்போகும் பிரபலங்கள் யார்? எனத் தெரிந்து கொள்ள ரசிகர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இதில் ஷிவானி நாராயணன், அனு மோகன், பூனம் பாஜ்வா, சூர்யா தேவி, சனம் ஷெட்டி, கோபிநாத், ரம்யா பாண்டியன், புகழ், ஷிவாங்கி, மணிமேகலை, அம்ரிதா, அதுல்யா ரவி, கிரண், வித்யுலேகா ராமன் ஆகியோர் கலந்து கொள்ளப்போகிறார்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நடிகையை மணந்தார் ஆரவ்



பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசன் வெற்றியாளரான ஆரவ், சரண் இயக்கத்தில் வெளியான ‘மார்க்கெட் ராஜா எம்.பி.பி. எஸ்’ படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமானார்.

‘ராஜபீமா’ உள்ளிட்ட சில படங்களில் ஹீரோவாக நடித்து வருகிறார். பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது நடிகை ஓவியா, ஆரவ்வை ஒரு தலையாக காதலித்தார். நிகழ்ச்சி முடிந்த பிறகும் இருவரும் காதலித்து வருகிவதாக கிசுகிசுக்கப்பட்டது. இந்நிலையில் ஆரவ்வுக்கும் ‘ஜோஷ்வா’ படத்தில் நாயகியாக நடித்து வரும் ராஹிக்கும் நேற்று திருமணம் நடைபெற்றது. இருவருமே பல வருடங்களாகக் காதலித்து வந்த நிலையில், பெற்றோர் சம்பந்தத்துடன் இந்த திருமணம் நடந்துள்ளது.

# ஈயை கொல்ல வீட்டையே எரித்த தாத்தா



பிரான்ஸ் நாட்டில் உள்ள பார்கோ செர்னோ எனும் கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் ஈயை அடித்துக் கொல்லும் முயற்சியில் தனது வீட்டின் ஒரு பகுதியை எரித்துள்ளார்.

80 வயதாகும் அந்த முதியவர் இரவு உணவு உண்ண சென்ற நேரத்தில், அவரைச்சுற்றி ஈ ஒன்று பறந்து கொண்டே இருந்திருக்கிறது.

அந்த ஈயின் ரீங்கார சத்தம் அவருக்கு கோபத்தை தூண்டவே அதை பூச்சிகளைக் கொல்லும் மின்சார பேட் ஒன்றின் மூலம் கொல்லலாம் என்று அவர் முடிவு செய்துள்ளார். ஆனால் அந்த சமயத்தில் அவரது வீட்டிலிருந்த எரிவாயு சிலிண்டரில் கசிவு நிகழ்ந்துள்ளது.

மின்சார பேட்டை இவர் பயன்படுத்தத் தொடங்கிய போது ஏற்கனவே இருந்த எரிவாயு கசிவால் அந்த இடத்தில் ஒரு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது.

இதில் அவரது வீட்டின் சமையலறை முற்றிலும் அழிந்துவிட்டது. வீட்டின் மேல் கூரையும் சிறிதளவு சேதத்துக்கு உள்ளாகியுள்ளது.

கையில் தீக்காயங்களுடன் அந்த முதியவர் உயிர் தப்பி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த ஈ என்ன ஆனது என்று இதுவரை யாருக்கும் தெரியவில்லை.

# எமோஜிக்களின் ‘மாஷ் அப்’ காலம்!



இப்போதைய இளைஞர்கள் எமோஜிக்கள் மூலமே வாட்ஸ்அப், மெசஞ்சர் மூலம் நீண்ட நேரம் அரட்டையடிக்கிறார்கள். தொடக்கத்தில் சிரிக்க, அழ, கோபப்பட எனப் பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் பொம்மைச் சித்திரங்கள் எமோஜிக்களாக அறிமுகமாயின. இது இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பைப் பெறவே, அரட்டைகளில் நிரந்தர இடத்தைப் பிடித்து அரட்டைகளை வளர்த்தது.

தற்போது இந்த எமோஜி அரட்டையும் அடுத்த நிலைக்குச் சென்றுவிட்டது. பழைய திரைப்படப் பாடல்களையும் சமீபத்திய படக் காட்சிகளையும், பாடல்களையும் இணைப்பது, பிரபல ஓவியங்களைப் பின்னணியாகக் கொண்டு திரைப்படக் காட்சிகளை இணைப்பது என்ற ‘மாஷ்அப்’ முறை பரவலாகிவிட்டதைப்போல, எமோஜிகளும் ‘மாஷ்அப்’ டிரெண்டுக்கு தப்பவில்லை. இப்போதெல்லாம் ‘மாஷ்அப்’ எமோஜிக்களே அரட்டைகளில் முதன்மை இடத்தைப் பிடித்துவருகின்றன.



# அல் ஜாயாவுக்கு வெற்றிக் கிண்ணம்

கந்தளாய், செப்.7

கந்தளாய் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளரும், ஜாயா விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபக தலைவருமான மறைந்த மர்ஹூம் ஜாயா பாரூக்கின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு, ஜாயா வெற்றிக்கிண்ணத்துக்கான கால் பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நேற்று நடைபெற்றது.

இந்தப் போட்டி கந்தளாய் அல் தாரீக் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இந்தச் சுற்றுப்போட்டி யில் பன்னிரண்டு விளையாட் டுக்கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப்போட்டிக்கு அல்ஜாயா விளையாட்டுக்கழகம் மற்றும் சன்றைஸ் விளையாட்டு கழகங்கள் தெரிவாகியிருந்தன. இறுதிப்போட்டியில் அல் ஜாயா விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து, ஜாயா பாரூக் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தை தம் வசப்படுத்தியது.

வெற்றிக்கிண்ணத்தை கந்தளாய் பிரதேசசபை உறுப்பினர் ஏ.சி.எம்.ஜவாஹிர் மற்றும் மறைந்த மர்ஹூம் ஜாயா பாருக்கின் புதல்வர் எம்.எவ்.எம். றிபான் ஆகியோர் இணைந்து வழங்கினார்கள். (ற)

# ஆஸிக்கு பலத்த அடி இங்கிலாந்து வெற்றி

லண்டன், செப்.7

ஆஸ்திரேலியா -இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது போட்டியிலும் இங்கிலாந்து 20 என்ற கணக்கில் ரி20 தொடரைக் கைப்பற்றியது. இதனால் ஆஸதிரேலியா அணி பட்லரின் அதிரடியால் மீண்டும் தோல்வியைச் சந்தித்தது.




ஆஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

2 ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. முதலில் ஆஸ்திரேலியா துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. வோர்னர் ஓட்டம் ஏதும் எடுக்காமலும், அலேக்ஸ் கேரி 2 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் 3 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 2 விக்கெட்டுகளை ஆஸ்திரேலியா இழந்தது.

கப்டன் ஆரோன் பிஞ்ச் 33 பந்தில் 40 ஓட்டங்களும், மார்கஸ் ஸ்டாய்னிஸ் 26 பந்தில் 35 ஓட்டங்களும், மேக்ஸ்வெல் 18 பந்தில் 26 ஓட்டங்களும் அடித்தனர். பேட் கம்மின்ஸ் 5 பந்தில் 13 ஓட்டங்களும், ஆஷ்டோன் அகர் 20 பந்தில் 23 ஓட்டங்களும் அடிக்க, ஆஸ்திரேலியா 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகள் இழப்புக்கு 157 ஓட்டங்களை அடித்தது.

பின்னர் 158 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களம் இறங்கியது. தொடக்க வீரர்கள் பேர்ஸ்டோவ் 9 ஓட்டங்களில் வெளியேறினர். அடுத்து ஜோஸ் பட்லர் உடன் தாவித் மலன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. தாவித் மலன் 32 பந்தில் 42 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பட்லர் 54 பந்தில் 77 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து 18.5 பந்துப் பரிமாற்றங்களில் 158 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 2:0 எனக் கைப்பற்றி இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. 3 ஆவது மற்றும் கடைசி ரி20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. (ற)

# ஜோகோவிச் தகுதிநீக்கம்

நியூயோர்க், செப்.7

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியிலிருந்து உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச் தகுதிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரும், 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான நோவக் ஜோகோவிச் (சேர்பியா), தரவரிசையில் 27 ஆவது இடத்தில் இருக்கும் ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டாவைச் சந்தித்தார்.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் ஜோகோவிச் தடுமாற்றத்துடன் ஆடினார். இதனால் முதல் செட்டில் புள்ளிகளை இழக்க நேர்ந்தது. இதனால் விரக்தியுடன் ஆடிய ஜோகோவிச் பந்தை தரையில் வேகமாக அடித்தார். அந்த பந்து அங்கிருந்த நடுவரின் மீது பட்டதில் அவர் காயமடைந்தார். இதனால் பதறிப்போன ஜோகோவிச் அவரிடம் மன்னிப்பு கேட்டதுடன் நிலைமையை விளக்கிக் கூறினார்.

ஆனாலும் போட்டி விதிகளின் படி ஜோகோவிச் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து, ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டா காலிறுதிக்கு முன்னேறினார். (ற)

### பெண்களுக்கான பளுதூக்கலில்

# யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்ப்பாணம், செப்.7

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்களுக்கான பளுதூக்கலில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி சம்பியனானது.

இந்தப் பளுதூக்கல் போட்டி யாழ் துரையப்பா விளையாட்டு பளுதூக்கும் திடலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியினர் 4 தங்கப் பதக்கங்கள், 6 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 13 பதக்கங்களைக் கைப்பற்றிச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தனர்.

உடுவில் பிரதேச செயலக அணியினர் 3 தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் உட்பட 4 பதக்கங்களைக் கைப்பற்றி இரண்டாமிடத்தைக் கைப்பற்றினர். (ற-422)



# பரு.பிரதேச செயலகம் புதிய சாதனை

பருத்தித்துறை, செப்.7

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியினர் சம்பியன் பட்டத்தை வென்று புதிய சாதனையைப் பதிவுசெய்தனர்.

இந்த ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டிகள் யாழ் துரையப்பா பளுதூக்கும் திடலில் நேற்று நடைபெற்றது. இதில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 5 தங்கப்பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள், 3 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 12 பதக்கங்களைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றனர்.

யாழ் பிரதேச செயலக அணியினர் ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட மூன்று பதக்கங்களை மாத்திரம் பெற்று இரண்டாமிடத்தைச் சுவீகரித்தனர். (ற-422)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 07.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.